823

உ

சிவமயம்.

# நாகை
# நீலலோசனி அம்மன் பேரில்
# தோத்திரம்.

இது

**நாகை மவுன சுவாமி**

என வழங்கும்

யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு

**சி. வே. அருளம்பலம் பாடியது.**

நாகபட்டணம்

ஜனோபகார அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1928. விலை 1 அணா.

18431

# அறிவிப்பு.

நாகபட்டணம் மவுனசுவாமி எனப்பெயர்பூண்ட நான் யாழ்ப்பாணம் அவ்வாய் வடக்கு என்னும் தலத்திலிருந்து புலன்பொறி கரணம் சீறியாடும் நடைப்படி காவடியாக அலைந்து திரிந்தபோது தன்நிலை படியாத்தாவ் நிஷ்டை நிலையைப் படிக்கவேணும் என எண்ணிச் சிதம்பரம் போவதாக நாகபட்டணம் வந்தபோது நீலலோசனி அம்மாள் என்னைக்கண்டு அங்கே ஏன் போகிறாய் என்னிடத்தில் ஞான நிஷ்டையைக் கற்றுக் கொள் என வேண்டியபடி அவ்விடத்தில் நான் ஞானநிலையான ஞான நிஷ்டையைக் கற்று அதிற் தேர்ச்சியடைந்தபோது பரிசோதிக்க வேண்டிய காலமாயிற்று பாடங்களைப் படித்துச் சரியாக ஒப்புப்பண்ணு எனக்கேட்டா அவ்விடத்தில் அப்பாட படனங்களின்முடிவு சர்வ சாட்சியாப் ஏக தாரணமாய் நின்று யாவர்க்கும் குறையிரவாப் பேரின்ப நிலை காட்டிப் பரவெளியை மூடிப் பிடித்து நிற்கும் பஞ்சபூதப் படலத்தைத் துறந்து எவ்விடமும் சுத்த வெளியாகக் காணும்படியான அருளற்றொழிலைச் செய்து காட்டவேணும் என்ற நிறைக் குறிப்பை நான் அறிந்த வழியில்

என்னால் இவ்வழவு காரியம் செய்ய முடியாதம்மா என
க்குமேல் வகுப்பிற் படித்த பரமபதியே நிஸ்டை நிலை
இயைத்தபோது மன்மதன்குழப்பிவிட்டான் அதன்பின்
கல்லால நீழலில் நிஷ்டையுற்றபோர் து மனம், புத்தி, சித்
தம், அகங்காரம் என்னும் நால்வர்களும் சீறி எழுந்து
உனக்கு நாங்கள் வேறாகக் கண்டு நிற்கிறோம். என
எதிர்க் கேள்வி கேட்டார்கள். அதன்பின் குருந்த மரத்
தடியில் நிஷ்டையுற்றபோது மூலக்கனவான வாயு படி
யாது சீறி யெழுந்து கூத்தாட்டி விட்டது சர்வ வல்ல
மையுள்ள பலசாலியாகிய பரமபதியே நிலைகொண்டு
நில்லாது ஆடியலைந்து தோடுவிழத் தில்லைக்காளி எதிர்
காண நடைபெற்றிருக்கும்போது சர்வ மூடனாகிய
ஏழையேன் அவ்வழவு காரியம் செய்து காட்டி நிற்க
முடியாது இன்னும் பராபரமே அப் படிப்பைப் படித்
துச் செய்ய அவரிடத்திற்றானே நியமித்து அவரையே
தாங்கள் பரிசோதிக்கவேணும் என நான் நீலலோசனி
அம்மாளிடம் கேட்டுக்கொண்ட மனுவே இத்தோத்திர
முடிவாகும்.

சிவமயம்.

## விநாயகர் துதி.

அகண்ட மாய் நின்றிலகு மரூபியாம் வெளியுளே
யண்டவுரு கொண்ட விறையே
அநாதிநிலை வெளியான வண்டத்துள் நடுவனு
யணிகொண்ட துருவ நிலையே
அகண்டமாம் வெளியுக்கு மண்டநடு நாராச
மானசுழி முனைத் துதிக்கை
ஆட்டுகின்ற குருவாக வணிகொண்டே வல்லபையி
னல்குலது தொட்ட பதியே
அகண்டமாம் வெளியதனை யவ்வியல்வு வெளியாக்க
வாதித்த னுல தாமோ
வத்துவித சேர்க்கையா லாகின்ற முச்சுடரு
மருள்வெளி யினைத் துலக்க
அகண்டமாம் வெளியம்மை யகிலாண்ட கோடியினி
லாசைவைத் தணைத்த படியா
யைந்து தொழிலாக்கியே யாகுமுடி வானவினை
யாக்குவா யானை முகனே.

# நீலலோசனி அம்மன்

## தோத்திரம்.

ஏகாந்த பேரின்ப மிணையாத சிற்றின்ப
மிரண்டகம தாக நிற்கும்
ஏகமா மகம்பிர்ம மிலிங்கமா விடையாரி
லெவ்வணம் நின்ற தம்மா
போகாந்த வத்வைதம் பூரணச் சேர்க்கையோ
பொலி வாந்த தாகாரமோ
பொங்குமதி கதிராகப் பூர்விந்து நாதமயல்
பொலியாத டங்கி நிற்கத்
தேகானு பவநெறிகள் தேர்ந்தார்கள் செய்வதோ
சிறுபதி னுலிங் கிர்யம்
தேவனே யணிந்தபடி திருநடஞ் செயும்போது
தேகிநா னதை யடக்கப்

பாகாயுன் பானிடம் பணிப்பதோ நான்செய்து
பஞ்சகிர்த் தியநிறுத்திப்
பங்காக வருவதோ நீலாச்சி யம்மையே
பார்பூத்த பரையி னுளே (1)

பசுக்கன்று கதறுதே பாம்புபா லுண்குதே
பண்கண்ட நஞ்ச தேறப்
பாய்வதோ வவஸ்தையா தாரங்கள் மேற்கொண்டு
பதியெங்கு மாயிருக்க
முசுக்கொண்டு தேடவே முனையுவழி பொருளதாய்
முட்டுகுரு நிலைய தெவடம்
முத்தியெது பூரண முறைபேசு மிடத்திலே
முனைவதோ தானென நிற்பதோ
மசுக்கொண்ட மாயையால் மறைத்தலாங் தொழில்
மறைத்திட்ட தாரை யார்க்கு [செய்து
மன்னனுத் தரவின்றி மாடங்கள் திறந்திடின்
மாறுகா வலர் சொலாரோ
வசுக்களோ வீசனே வருஞ்செயல்கள் முடிக்குவார்
வாழுசெயல் முதல்வர் யாவர்
மதிநாகை யம்பதியில் வாழுநீ லாச்சியே
மானிலம் பூத்த பரையே. (2)

ஒன்றிரண் டாகவே யுருக்கொண்ட துலகமெனி
　　னொடுக்கத்திற் பலவு மொன்று
யொன்றிடாச் சமாதியினி லோர்வருற் றிருந்திடவு
　　மோர்வர் சோதியிற் கலந்து
மன்றாக முத்தியினில் மருவியே பேரின்ப
　　மார்க்கமது வுற்ற தெங்ஙன்
மதிகதிரை மூடுறும் நாகையம் பதியதனில்
　　வாழ்கின்ற தலைவி யாளே
குன்றாக வெழுசெந்தீ நான்முதல்வ னென்னவே
　　கூட்டாய நாதி நிலையிற்
கூடியே நின்றதோ விடையினி லுதித்ததோ
　　குருஸ்வாமி நா னென்னவே
அன்றாக வுதித்ததீ வாய்மதம் பேசவரி
　　னனுதிநிலை யான மோனம்
அலறியே சிரசான வருபிநா னென்னுமோ
　　வண்டத்தைப் பூத்த பரையே. (3)

விளக்கதனி லும்பார்வை வினைநிலைய திச்சையும்
　　விளங்கிடுவ தான வல்குன்
மேலான விருகொங்கை கதிர்மதியின் மேலாக
　　விளங்கியதாம் மங்கை மார்கள்

களங்கமதில் பேரின்ப நிலைவிட்டுச் சிற்றின்ப
காரணம் பொலிந்து நாகைக்

காயாரோ கணேஸ்வாமி காலடியில் வீழ்வதாற்
காணவரு பேறு காணிற்

துளங்கிடுங் காயாதி பிரபஞ்ச மாயையாந்
தொல்லையது காணு மின்பம்

தோற்றவே பேரின்பந் தொடுக்காது விடுகுமே
தோகை மயில் நீலாச்சிநீ

பளக்கிடும் ஞானநிஷ் டையதை நான்படித்திலேன்
பரனேயன் னிஷ்டை செய்து

பலருக்கும் பேரின்ப நிலைகாட்டப் பணிக்குவாய்
பார்பூத்த பரையினளே. (4)

மறைத்தலாந் தொழில் செய்யும் மகேசனே துறப்பதோ
மாயையாந் தேகக் கூட்டை

மருவியே நின்றபடி துறவியென் றேபட்டம்
வைத்ததார் தேகக் கூட்டுள்

நிறைத்தபடி காமமும் நெருப்பான நாதமும்
நின்றிடிற் குடும்ப மன்றோ.

நீண்டதா மரையில்நீர் நிற்றல்போ லுள்ளேவெளி
நேர்படா நிற்கு மாயிற்

சிறைபட்ட முறையாகத் தேகமாம் மாயையொடு
சேர்ந்திருந் திடவேண் டுமோ
சீர்பெருகு நாகையம் பதியில்வாழ் நீலாச்சி
செல்வ நகர்த் தேவதேவி
முறைப்பட்ட தேகமது மூடியே நின்றபடி
முனைகண்ட முச்சுடரினால்
மூட்டுநிஷ்டை நாடிசெயல் முறைசிவ நிலையதோ
முத்தியணி முனையு பரையே. (5)

என்னைநீ சுட்டிநோக்கி னிரண்டகம தாமென்ன
விறைபதிக் கியம்பு பசுவுக்
கிதென்ன மாராய மிரண்டாகு மோவேக
மென்றது பதிய தப்போ.
தன்னையே காணென்னச் சாற்றினாய் வேதமொழி
தடையுறச் சாற்ற லொன்றோ
தானான நிலையைநீ சமைப்பதோ வலதுநான்
தத்துவங் களை யடக்கி
முன்னையே யிருந்திட்ட முழுப்பேறு கண்டிடும்
முத்தியத் துவித மென்றாய்
முனைவாக வேறொன்றை முட்டலே சித்தியாய்
முறைகாண வேக மென்னின்

அன்னநிலை காணலா யாரைநான் பார்ப்பதோ
வறிந்ததா யறியாததா
யதுவேய தாமென்னி னறையவே வேதங்க
ளானதேன் நாகை யரசி (6)

நானென விலாவொன்று நானென்ன நிற்கவும்
நடுநிலைய தான வொன்று
நானென்ன நில்லாது நாயகத் திருவனுப்
நடத்துநிலை யியல்பு விட்டுத்
தானெனவும் நில்லாது தடுமாறி மறைந்ததாம்
சத்திசெய் வஞ்ச கத்தாற்
சகமான பொய்நடைகள் சமையலாய் நடை கொள்ளத்
தன்மயம தான வொன்று
வானென்ன நிற்கவே வழிகேட்டு வாதாடும்
வழக்குக்குத் தானென்னவே
வழிசொல்லி யேகமாய் வைப்பாரு மிவ்வுலக
வாழ்க்கைவிதி கூறி நின்றுந்
கோனென்ன வேயெவரும் கூறுநிலை யேகமாய்க்
கொடிமுடியிற் சந்தி பெறுமோ
குவலயம் படைத்திட்ட நாகைநீ லாச்சியே
குருவாக நின்ற கொடியே. (7)

திட்டா ரேகமாய்த் தானென்ன நில்லாது
தம்பிகை யுதவி கேட்கிற்
பயோர்க ளேற்காது தள்ளுவா ரேயத்தைத்
தரும் வேத வாகமங்கள்
இனித்திட்ட படிகூறு மிறையவன் தானென்ன
விருந்திடா தியம்பி நின்று
லேகனு மென்னவே யெவரினைக் காண்பதோ
வியம்பலைக் கேட்ட பேர்கள்
சனித்தபடி நான் வந்தேன் சாத்திரமாய் நீவந்தாய்
தலைவன் யார் நானோ நீயோ
சாற்றினு மெனக்காகத் தலைவன்நீ யாமென்னிற்
தழுவலாய் வரலே னென்னக்
குனித்தபடி வேதங்கள் குட்டினு லேமண்டை
குலுங்குநடை யநாதி நிலையோ
குருவான நாகையிற் கொடியாக வெழுகின்ற
குமரியே நீலாதாக்ஷியே. (8)

உருவான வண்டத்துக் குள்ளான பொருளாக
வோங்குகரி முகன் துதிக்கை
உள்ளபடி குருவாக வோடுகின்ற ராகுவே
ஓங்காரத் துள்ளாம் வஸ்து

திருவான மங்கையின் நாயனும் நடுவனே
திருமாலாம் பிராண வாயு
சிவனை யெடுக்கின்ற வெமனுமவ னென்னவே
சேர்பாச வலைய தாக
மருவலாம் தசவாயு மாமுகன் புறவங்க
மானமாம் புறத்தோல் மூடி
மதிப்பாக வுள்ளபடி யுருத்தோற்ற மாகுமே
மாயாக்கை நீங்கி நிற்கும்
அருவான வெளியுக்கு மணவான சிவனு
யறைகின்ற பொருள் களுக்கும்
ஆரம்மா குருமூர்த்தி நாகைநீ லாச்சியே
அகிலத்தைப் பூத்த பரையே. (9)

அருட்பெருஞ் சோதிபோ லமைவான விளக்கினொளி
யாங்காங்கு நின் றொலிக்க
வணமவான மண்டபம் கோபுரம் மதிற்களு
மழகான தேவ சபைபோற்
தெருவீதி மாடமா ளிகைநகர்ச் சிறப்பினைச்
செப்பிடும் மேள வொலியே
சிவராச தானியாய்ச் செப்புமிப் பூமியின்
சிறப்புல கதுட் சிறப்பு

ளர் செல்வநகர் மங்கையர்கள் பேச்சினொலி
வானுலக வாத்தியம் போல்
மதி யேசிரசில் மல்லிகைப் பூப்போல
மருவிவிளை யாடி நிற்கும்
பருவாழ்வு பெற்றநகர் நாகைநீ லாச்சியே
பேதையா முலக வாழ்க்கைப்
பிரபஞ்ச மயல்தீர்த்துப் பேரருட் செயல்புரியப்
பிரானிடம் பணிப்பா யம்மா. (10)

உலகெலாம் பூர்த்திட்ட வொருத்தியே யுலகினூர்
உற்பவித்த சேர்க்கை முறையால்
உக்கிரம் சாந்தமது முல்லாச மகிழ்ச்சியது
முறுவதாய் நான் பெர்யனென்
திலகவே யிட்டவணி யீடுநிலை தானென்ன
விறுமாப்புக் கொண்ட தாட
வெல்லையில் வாவெளியு மிசைந்ததோ காற்றூட
வெரிமூண்டு வெறு வெளியிலே
குலவலாய் மண்மேகக் கூட்டான விருளதைக்
கூடாது துறந் திட்டதோ
குருவென்ன வேறுநிலை கொண்டபலர் கண்டநிலை
கூடுமுட் பெருமை யேது

தலமதாம் பதிபசுவும் சார்ந்திட்ட பாசமும்
　　தன்னதியல் வடிவ தேது
தலைநாகை யம்பதியிற் றங்குநீ லாச்சியே
　　சகம்பூத்த பரையினளே.

ஐந்துதொழி லானபஞ் சகிர்த்தி யநடையு
　　மரைக்காசு பெறுவ தாமோ
அரிவையரை யணைத்தபடி யத்துவிதம் காட்டாம
　　லாட்டமாம் லீலை யாடிச்
சிந்துகலை விந்தாகச் சிதையும் பாசத்தினைச்
　　சேயிழையா ரவ்கு விட்டுத்
தீயான வுபாதியும் நஞ்சுகொடி மயக்கமும்
　　சேர்வதாம் பிறப்ப தாலே
முந்துமரு ளானவெளி முறையான மங்கையர்கள்
　　முட்டுகருப் பிணிக ளாக
மூசியே மெய்மறந் திடுவதா முபாதியினை
　　முத்தியெனக் காண்ப தாமோ
பந்தமா மிவ்வுலக பிரபஞ்ச வேதனையைப்
　　பார்த்துநீ யிருப்ப தேனோ
பணிகொண்ட நாகையிற் பதியுநீ லாச்சியே
　　பார்பூத்த பரையி னளே. (12)

## வாழ்த்து.

ளர் ...ிந்திடினும் புலன்பொறிக ளழிந்திடினும்
வா ஆ மதியினொடு தழலழிந்து போனாலும்
...ம்மதிர வெளியினுக்கு மெல்லியலாம் நீலாச்சி
மாறப் பில்லாத தன்மையுற வாழுவளே

பெரு...
...னாலும் முடிவொடுக்கம் சத்திநீலாச் சியிலொடுங்கும்
...காகப் பரந்தபரன் பரைசத்னி பாதமுத்தி
பிர ...ங்குவதா யுருத்தோற்றம் தாங்காத முத்தியினிற்
பொங்கு மமுதங்கடைந்து பொசிப்பாகும் பூவுலகே.

பரனேஷிஷ்டை பரிந்துதன்னிற் பாரியினை யடக்காக்காற்
புரமான வத்துவிதம் புரியாத வேகநிலை
சிரமாகச் சத்தியினிற் சேர்வதுற யாவுமவள்
வரமாகப் புணர்ந்தபடி வாழ்வாள் தன் நீலவாழ்வே.

அருள்ற்றெழில் புரிந்து
முத்தியானபோது
முற்றிற்று.

ஜனோபகார பிரஸ், நாகை. 28—466.